1978 ஏப்ரல் 26] [மாண்புமிகு தற்காலிகத் தலைவர்]

சொன்னது நினைவுக்கு வருகிறது. இந்தச் சபையில் பெருமிதத்துடன் ஒன்றைச் சொல்கிறேன் என்று சொல்லி, '' இங்கே 63 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். இந்த 63 பேரில் ஒவ்வொருவரும் எனக்கு ஆப்த நண்பர்கள். எவரிடமும் பாகுபாடு இல்லை, பாரபட்சம் இல்லை'', என்று சொன்னார். அதைப் போல நம்முடைய தலைவர் அவர்கள் எல்லா உறுப்பினர்களையும் ஆப்த நண்பர்களாக மதித்துப் பழகி யாரிடமும் பாரபட்சம் இல்லாமல் நடப்பதற்கு வழி காட்டியாக இருப்பார்கள் என்ற நம்பிக்கையைத் தெரிவித்துக்கொண்டு, நீண்ட நாட்களுக்கு எல்லாம்வல்ல இறைவன் அவர்களுக்கு அருள்புரிய வேண்டுமென்று ஆண்டவனைப் பிரார்த்தித்து, என்னுடைய உரையை முடிக்கிறேன்.

இப்போது மேலவைத் தலைவர் அவர்களை அவை முன்னவரும் எதிர்க் கட்சித் தலைவரும் அழைத்து வந்து அவரது இருக்கையில் அமர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தலைவர் அவர்கள் தம் இருக்கைக்குச் சென்று அமரும் வரை உறுப்பினர் அனைவரும் எழுந்து நிற்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

(பிறகு அவை முன்னவரும் எதிர்க் கட்சித் தலைவரும் அவைத் தலைவரை அவரது இருக்கைக்கு அழைத்து வந்தனர்.)

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்களே, இந்த மேலவையின் தலைவராக என்னை ஒருமனதுடன் தேர்ந்தெடுத்தமைக்காக கைகூப்பி வணங்கி என்னுடைய நன்றியறிதலை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

2. சட்ட மன்ற மேலவைத் துணைத் தலைவர் தேர்தல்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: எனது முதல் அலுவல் துணைத் தலைவர் அவர்கள் தேர்தலை நடத்தி வைப்பதாகும். அது முடிந்தவுடன் பாராட்டுரை வழங்கப்படும்.

மேலவைத் துணைத் தலைவர் பதவிக்குப் போட்டியிடும் வேட்பாளரின் வேட்புத்தாள் ஏற்கனவே செயலாளரிடம் கொடுக்கப்பட்டுள்ளது. மேலவை விதி 5, துணை விதி (4)-ன் படி, துணைத் தலைவர் பதவிக்கு முறைப்படி மொழியப்பட்டுள்ள வேட்பாளரின் பெயரையும், அவரை முன்மொழிந்தவர், வழிமொழிந்தவர் ஆகியோரின் பெயர்களையும் இவ்வவையில் நான் படிக்க வேண்டும். அதன் விவரம் வருமாறு :—

வேட்பாளரின் பெயர் : திரு. ஜி. சுவாமிநாதன்.

முன்மொழிந்தவர் : திரு. ஏ. ஆர். தாமோதரன்.

வழிமொழிந்தவர் : திரு. டி. வி. டிமாண்டி.

ஒரே ஒரு வேட்பாளரின் பெயர் மட்டுமே மேலவைத் துணைத் தலைவர் பதவிக்கு மொழியப்பட்டிருப்பதால், நான் திரு. சுவாமிநாதன் அவர்கள் துணைத் தலைவராக ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என அறிவிக்கிறேன். அவருக்கு எனது உளமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன் அவர்களை, தமக்கு உரிய இடத்தில் வந்து அமருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் திரு. ஜி சுவாமிநாதன் அவர்கள், துணைத் தலைவர் இருக்கையில் வந்து அமர்ந்தார்.)

3. மேலவைத் தலைவருக்கும் துணைத் தலைவருக்கும் பாராட்டுரை பகர்தல்

மாண்புமிகு மேலவைத் தலைவர்: முதலில் மாண்புமிகு மேலவை முன்னவர் பாராட்டுரை வழங்குவார். தொடர்ந்து எதிர்க்கட்சித் தலைவர், மற்ற கட்சித் தலைவர்கள் பாராட்டுரை வழங்கியபின் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பாராட்டுரை வழங்குவார்.

மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களின் நன்றியுரைக்குப் பின்பு எனது உரை அமையும்.

*மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, பாரம்பரியமும், வரலாற்றுப் புகழும் மிக்க இந்த மேலவைக்குத் தலைவராக, ஏகமனதாக அனைத்துக் கட்சியைச் சார்ந்தவர்களும் பல்வேறு தொகுதிகளிலிருந்து தேர்ந்தெடுக்கபபட்டிருக்கிற மாண்புமிகு உறுப்பினர்களும் தங்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். அதைப் போலவே மாண்புமிகு மேலவைத்துணைத் தலைவராக, திரு. ஜி. சுவாமிநாதன் அவர்களையும் ஏகமனதாகத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள்.

மாண்புமிகு தலைவர் அவர்களையும், துணைத் தலைவர் அவர்களையும், இந்த அவையின் சார்பிலும், தமிழக அரசின் சார்பிலும் பாராட்டுவதற்கான வாய்ப்பைப் பெற்று நான் இங்கே நிற்கிறேன்.

இந்த இனிய நேரத்தில் பல்வேறு நினைவுகள் நம் நெஞ்சில் சுழன்று வருவதைப் பார்க்கிறேன். இந்த மேலவை, இதனுடைய பெருமை, வரலாறு ஆகிய இவைகளை எண்ணிப் பார்க்கிற போது, இந்த இடத்திற்குத் தகுந்த ஒரு பெரும் தலைவரை, இன்றைக்கு நாம் தலைவராகப் பெற்றிருக்கிறோம் என்று மகிழ்ச்சி மேலோங்கி நிற்கிறது. இதற்கு முன்பு இங்கே தலைவர்களாக வீற்றிருந்தவர்களைவிட வயதிலும் மூத்த தலைவராகத் தாங்கள்